2012 மே 7]

மற்ற அனைத்து நகராட்சிகளுக்கும் உரிய காலத்தில், உரிய நேரத்தில் நிதியாதாரங்களைக்கொண்டு திட்டம் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பாதாள சாக்கடைத் திட்டம் குறித்து 13 பேர் மாண்புமிகு உறுப்பினர்கள், அவர்களுடைய தொகுதியில் அமைக்கவேண்டுமென்று கேட்ட அந்தக் கேள்விகளுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த பதிலுக்கு நன்றி.*

வினா வரிசை எண் 217, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

217—

துணைக்கோள் நகரம்

***158—டாக்டர் க. கிருஷ்ணசாமி:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) துணைக்கோள் நகரம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஆம். திருவள்ளூவர் மாவட்டம், பூந்தமல்லி வட்டம், திருமழிசை கிராமத்திற்கு அருகில் உள்ள செம்பரம்பாக்கம், குத்தம்பாக்கம், பர்வதராஜபுரம், நரசிங்கபுரம் மற்றும் வெள்ளவேடு ஆகிய 5 கிராமங்களை உள்ளடக்கி, திருமழிசை துணைக்கோள் நகரம் அமைக்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 8–9–2011 அன்று சட்டப் பேரவையில்

அறிவித்ததற்கிணங்க, பூர்வாங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

டாக்டர் க. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை, இந்தியாவில் மட்டுமன்றி உலக அளவிலும் பிரசித்திபெற்ற நகரம். தற்போது 80 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் இங்கு வாழ்ந்து வருகிறார்கள். தினமும் 15 இலட்சம் முதல் 20 இலட்சம் பேர் வந்துசெல்லக்கூடிய நகரமாக சென்னை இருக்கிறது. எனவே, இன்று இருக்கக்கூடிய இந்தச் சூழலில், இங்கு வாழக்கூடிய அனைத்து மக்களுக்கும் குடியிருப்புகள், குடிநீர் போன்ற அத்தியாவசியப் பொருட்களான அடிப்படைத் தேவைகளை நிறைவுசெய்ய இயலவில்லை. எனவே, துணைக்கோள் நகரம் அமைக்கவேண்டுமென்ற கோரிக்கை நீண்டநாட்களாக சென்னைவாழ் மக்கள் மத்தியில் இருந்து வருகிறது. அதை நிறைவேற்றக்கூடிய வகையிலே, இப்போது திருமழிசை என்ற இடத்தில் ஒரு துணைக்கோள் நகரம் அமைப்பதற்கு தமிழ்நாடு அரசு நடவடிக்கை எடுத்து வருவது வரவேற்கத்தக்கது. அதேசமயத்தில், இது 5 கிராமங்களை மட்டும் உள்ளடக்கியதாக இருக்கிறது. இது போதுமானதாக இருக்குமா? ஏற்கெனவே இந்தப் பகுதியில். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, தயவுசெய்து கேள்வி வடிவத்தில் கேளுங்கள்.

டாக்டர் க. கிருஷ்ணசாமி: ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட இந்தத் திட்டத்தை முழுமையாக விரிவுபடுத்தி, அதாவது satellite மையம் என்று சொல்கிறபோது இதைவிட பெரியதாக இருக்கவேண்டும். இது சிறியதாக இருக்கிற மாதிரி இருக்கிறது. சென்னை வளர்ந்து வரக்கூடிய நகரம். வளர்ந்து வரக்கூடிய மக்கள் தொகைக்கேற்ப, அதற்கு ஈடு கொடுக்கக்கூடியவகையில் ஒரு பெரிய துணைக்கோள் நகரம் அமைக்க அரசு முன்வருமா என்பதுதான் என்னுடைய கேள்வி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

2012 மே 7]

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மற்றும் சென்னையைச் சுற்றியுள்ள பகுதிகளில் நிலத்தின் மதிப்பு அதிகமாக உயர்ந்துள்ள காரணத்தினால் நிலம் எடுக்கும்போது விவசாயிகள், நில உரிமையாளர்கள், நீதிமன்றத்திற்குச் செல்கிறார்கள், போராடுகிறார்கள். அவர்களுக்கு சில அரசியல் கட்சிகளும் உறுதுணையாக இருக்கின்றன. இப்படிப்பட்ட சூழ்நிலையில், சென்னை மாநகர மக்களின் அடர்த்தி மற்றும் மக்கள் பெருக்கத்தைக் கருத்தில்கொண்டு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த ஆண்டில் திருமழிசையில் 312 ஏக்கர் நிலத்தில் இத்திட்டத்தை அறிவித்தார்கள். மேலும் கிட்டத்தட்ட 140 ஏக்கர் நிலம் தொடர்பான வழக்கு நீதிமன்றத்தில் இருக்கிறது. அதையும் சமாதானமாகப் பேசி, அந்த வழக்கையும் முடித்து, அங்கு ஒரு துணைக்கோள் நகரம் கூடிய சீக்கிரத்தில் அமைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் க. கிருஷ்ணசாமி, நீங்கள் 'கூடிய சீக்கிரமாக', சீக்கிரம் கேள்வியைக் கேளுங்கள்.

டாக்டர் க. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சியில்கூட இதுபோன்ற ஒரு திட்டம் அறிவிக்கப்பட்டது. ஆனால், சில கட்சிகள் கொடுத்த எதிர்ப்பின் காரணமாக அந்த அரசு பின்வாங்கிவிட்டது. நம்முடைய அரசைப் பொறுத்தவரையில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எடுத்த காரியத்தை நிறைவேற்றுவதிலே உறுதியாக இருக்கக்கூடியவர்கள். எனவே, அந்த அடிப்படையில் வெறும் 300 ஏக்கர், 500 ஏக்கர் என்பது எந்தவிதத்திலும் அந்தத் துணைக் கோள் நகரத்தினுடைய நோக்கத்தை நிறைவேற்றாது. ஏனென்று சொன்னால் தனியார்களே 1,000 ஏக்கர், 2,000 ஏக்கர், 3,000 ஏக்கர் அளவில் தனி நகரெல்லாம் உருவாக்கி வருகின்றபொழுது, 5,000 ஏக்கர் 10,000 ஏக்கருக்கு மேற்கொண்டிருக்கக்கூடிய ஒரு துணை நகரத்தை நிறுவுவதற்கு தமிழ்நாடு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[2012 மே 7

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 'எடுத்த காரியத்தை முடிக்கக்கூடியவர்' என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். எப்படி கூடங்குளம் பிரச்சினையைக் கையாண்டாரோ, அதைப்போல தேவைப்பட்டால் நிச்சயமாக ஒரு பெரிய துணைக்கோள் நகரத்தை அம்மா அவர்கள் அமைக்கக்கூடிய நேரம் வரும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி அவர்கள்.*

திரு. ஆர். சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துணை நகரம் என்றால் என்ன? துணைக் கோள் நகரம் என்றால் என்ன? இவற்றிற்கான வித்தியாசம் என்ன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரியப்படுத்துவாரா என்பதைக் கேட்டுக்கொள்கிறேன். மேலும் என்னுடைய தொகுதி அமைந்துள்ள, மதுரை மாவட்டத்தில், மதுரை மாநகர் மிகவும் நெரிசலாக இருந்து கொண்டிருக்கிறது. வளர்ச்சி அடைந்து கொண்டிருக்கின்ற நேரத்திலே மிகவும் நெருக்கடியாக இருக்கிறது. எனவே, மேலூர் தொகுதியில் ஒரு துணைக் கோள் நகரத்தை அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த நகரங்களுக்கான* difference*–ஐக் கேட்கிறார். அவருடைய கேள்வி மூலக் கேள்விக்குத் தொடர்பில்லை. மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துணை நகரம் என்றால் சாதாரண சாப்பாடு. துணைக் கோள் நகரம் என்றால் ஸ்பெஷல் சாப்பாடு. அதாவது சாதாரணப் பேருந்து, ஏ.சி. பேருந்து போன்றது. கோள் என்பது நட்சத்திரம். அதைச் சுற்றி நட்சத்திரங்கள் இருப்பது போல, சில*

மருத்துவமனைகள், பேருந்து நிலையம், பள்ளிக்கூடம், பூங்காக்கள், தெருக்களெல்லாம் நேராக, அகலமாக ஒரு சுற்றுச்சூழல் கட்டமைப்போடு இருக்கக் கூடியதுதான் துணைக்கோள் நகரம். துணை நகரம் என்பது 50 ஏக்கருக்குள்ளே சிறிய நகரமாக இருப்பது துணை நகரம் என்பதைப் பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 218, மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

218—

மகளிர் விடுதி

***5630—செல்வி கே. பாலபாரதி:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல்லில் பணிபுரியும் மகளிருக்கான விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

திண்டுக்கல் மாவட்டத்தில் வேலைக்குச் செல்லும் பெண்களுக்காக, மத்திய அரசு மானியத்தினைப் பெற்று, தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்மூலம் ஏற்கெனவே இரண்டு விடுதிகள் செயல்பட்டு வருகிற காரணத்தால், திண்டுக்கல் மாவட்டத்தில் அரசு சார்பாக வேலைக்குச் செல்லும் பெண்களுக்கான தங்கும் விடுதி அமைப்பது குறித்து அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.*

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டத்தில் 250—க்கும் மேற்பட்ட பஞ்சாலைகள் இருக்கின்றன. பல்வேறு அரசுத் துறைகளில் மற்றும் தனியார் துறைகளில் பணியாற்றக்கூடிய உழைக்கும் பெண்கள்